656



இணுவில் மருதனார்மடம்
அருள் வளர் ஸ்ரீசுந்தர
ஆஞ்சநேயர் கோயில்
மகாகும்பாபிஷேக வெளியீடு

# ஆஞ்சநேய பிரபாகம்

**29-01-2001**

அன்பளிப்பு :- தயா அச்சகம்

விலை ரூபா 30/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஞ்சநேய சுவாமிக்கு

## அலங்காரப் பிரதிட்டை விழா – 29.01.2001

காலம் உருண்டோடிக் கொண்டிருக்கிறது. எமது வழிபாடு, சமூக உறவுகள், சமய சிந்தனைகள் யாவும் வேகமாக மாறிக் கொண்டிருக்கின்றன. சிவவழிபாடு, சக்தி வழிபாடு, விநாயக வழிபாடு, முருக வழிபாடு, வயிரவ வழிபாடு என்று எம்மை வழி நடத்திய காலம் ஒன்று இருந்தது. ஆனால் இன்று ஐயப்ப வழிபாடு, ஆஞ்நேய வழிபாடு என்பன மிகப் பிரசித்தியடைந்து விட்டது. எங்கு பார்த்தாலும் ஐயப்பனுக்கு எழுச்சியான விழா. அதே போல் ஆஞ்சநேயரின் திருவுருவப்படம் தொங்காத வர்த்தக நிலையங்களே இல்லை என்னும் அளவுக்கு ஒரு ஈடுபாடு. இவற்றையெல்லாம் கண்டும் கேட்டும் பூரிப்படைகின்றோம்.

எங்கள் தேவஸ்தானத்து பிரதம குருவாகக் கடந்த பத்தொன்பது ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருபவர் சிவஸ்ரீ. இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் அவர்கள். உசன் கந்தப் பெருமானின் பிரதம குருவாக விளங்குபவரும் இவரே. கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்றறியும் ஐம்புலன்களையும் தான் பூசை செய்யும் தெய்வத்திடத்தே கண்டு பெருமிதம் அடைபவர் இவர். பத்து வருடங்களுக்கு மேலாக ஆஞ்சநேய பக்தி இவர் உள்ளத்தில் துளிர்த்து விட்டது. சுருங்கச் சொன்னால் ஆஞ்சநேய பிரவாகம் இவரை வளைத்துக் கொண்டது என்று கூறுவது மிகப் பொருத்தமானது.

தனது உடல், பொருள், ஆவி மூன்றையும் ஆஞ்சநேயருக்கே அர்ப்பணித்தார். ஆலயம் ஒன்றை அமைக்க எத்தனித்தார். எங்கும் இந்த எண்ணத்துக்கு வரவேற்புக் கிடைத்தது. துணிவோடு செயற்பட்டு வெற்றியும் கண்டுவிட்டார். அதற்குரிய இடமும் மருதனார்மட பெருந்தெரு ஓரத்திலே கிடைத்தது. ஆதரவு நாலாபக்கங்களிலும் இருந்து வந்து சேர்ந்தது. சோர்வடையாமல் துணிவோடும் பக்தியோடும் செயற்பட்டு இன்று மனநிறைவு பெற்றுவிட்டார். ஆஞ்சநேய சிலை தமிழகத்திலிருந்து எழுந்தருளியது. கப்பலால் இறக்கி ஊர்வலமாக வந்த எழுச்சி மிக்க இந்தக் காட்சியைக் காண இந்த மண்ணின் மைந்தர்கள் ஒன்று கூடினர். குடமுழுக்கு விழாவும் 29.01.2001ல் இடம்பெற இருப்பது மிகவும் மகிழ்வுக்குரிய நிகழ்வாகும். எனவே குருக்கள் ஐயாவின் அருள் முயற்சியையும் ஆஞ்சநேய அனுக்கிரகத்தையும் உள்ளத்திருத்தி நலமடைவோமாக.

**கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி**
சமாதான நீதிபதி
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் - இணுவில் - மருதனார்பதி

# அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய சுவாமி

# திருத்தல வரலாறு

இவ்வுலகில் ஆங்காங்கே பற்பல தலங்களும் பற்பல மூர்த்திகளும் மக்களுக்கு அருள் சுரப்பதைக் காண்கிறோம். பல தலங்கள் தான்தோன்றித்தலங்களாகவும் பல தலங்கள் தம் அடியார்களுக்கு காட்சிகாட்டி, அமைந்த தலங்களாகவும் அமையப்பெற்றன. அவ்வவ்விடங்களில் அமர்ந்த மூர்த்திகள் தத்தம் அடியார்களுக்கு வேண்டிய சித்திகளைத் தந்துகொண்டிருக்கிறார்கள்.

இறைவன் திருவுளப்படியே இவை நிகழ்கின்றன என்பதை யாம் சிந்திக்க வேண்டும். அவன் நினைத்தால் எல்லாம் நடக்கும். "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்பது திருவாசகம்.

ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயசுவாமி, தெல்லிப்பழை துர்க்கையம்மைக்கு பூசையாற்றும் பிரதம குருவாகிய ஸ்ரீ. இ. சுந்தரேஸ்வர குருக்களின் உள்ளத்தில் புகுந்து பிரகாசித்த அருளின் வெளிப்பாடே ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயசுவாமி கோயிலாகும்.

ஸ்ரீ சுந்தரேஸ்வர குருக்கள் - கோயில் கட்டுவதற்கு இடம் தேடினார். யாழ்ப்பாணப் பகுதி முழுவதும் ஓடினார். அவர் ஓடிய ஓட்டம் மருதனார்மடத்தில் நின்று விட்டது. அந்த இடம்தான் இன்றைய ஆஞ்சநேயர் கோயில்.

இந்தத்தலம் முன்னொரு காலம் மக்கள் நடமாட்டமின்றிக் காடாய்க்கிடந்த இடம். ஒரு மகான் இந்த இடத்தில் ஒரு குடிசை கட்டி ராம நாமம் செபித்து ஸ்ரீ ராம சக்கரத்தைப் பூசித்து வந்தார். யாருமற்ற இடத்தில் ஒரு வாலிபன் வந்து சேர்ந்தான். அவருக்குத் தொண்டு செய்தான். தானும் ராமா ராமா என்று பாடுவான். அந்த மகான் இவ்விடத்திலேயே தேகத்தை விட்டார். தொண்டனும் மறைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குடிசை கிடந்த இடத்தில் - ஞானநெறி படித்த எத்தனையோ சித்தர்கள் தங்கிச் சென்றார்கள். கால கதியில் இக்குடிசை மறைந்தது. காடு நாடாகியது – நகராகியது. மேற்படி நிகழ்ச்சிகள் நிகழ்ந்த இடமே ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய சுவாமி வீற்றிருக்கும் இத்தலமாகும் இவ்வரலாறு ஆஞ்சநேய சுவாமியின் திருவாக்கால் கிடைத்தது. ஸ்ரீசுந்தரேஸ்வரக் குருக்களும் சிறியேனும் மூலஸ்தானம் வரவேண்டிய இடத்தைத் தீர்மானிப்பதற்குச் சென்றிருந்தோம். சிறியேன் பெருமானைத் தியானித்தபடி, குருக்களிடம் ஒரு முளைக்கட்டையைக் கையில் கொடுத்து "கிழக்கு நோக்கிச் செல்லுங்கள். யான் சரி என்று சொன்னவுடன் அங்கே கட்டையை அடியுங்கள்" என்றேன் அப்படியே இடமெடுத்த கோயில்தான் இந்தக் கோயில். ஸ்ரீ ஆஞ்சநேயசுவாமி இங்கே காட்சிகாட்டினார். கோயில் வளர்ந்தது. தெய்வீகம் பேசுகிறது.

கலாநிதி – அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி J.P. அவர்கள் 22.04.99 பிரமாதி வருடம் சித்திரை மாதம் 9ஆம் நாள் வியாழன் பூர்வ ஸப்தமித்திதி புனர்பூச நட்சத்திரத்தில் ஆலயத்துக்கு அங்குரார்ப் பணம் செய்து வைத்தார். அந்தணர்குழாம் வேத பாராயணம் செய்ய பல சைவப் பெரியோர்கள் பல அடியார்கள் மலர்மாரி பெய்ய அத்திவாரக்கல் நாட்டப்பட்டது. எம்பெருமான் கோயில் நாளொரு வண்ணமாய் வளர்ந்து மிளிர்கிறது. புண்ணிய சீலர்களின், பொருட் கொடையும் பணக்கொடையும் ஆலய வளர்ச்சிக்கு உதவிக் கொண்டி ருக்கின்றன. அன்படியார்கள் ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமியைத் தரிசித்து இஷ்ட சித்தி பெறுவார்களாக. பிணி தீரும் - துயர் தீரும் - சுகம் வரும்.

ஓம் ஸ்ரீ ராம ஜெயம்

நாகேஸ்வரம்
அளவெட்டி.
25.12.2000

அன்படியான்
அருட்கவி
**சீ. விநாசித்தம்பி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையார் பாடல்

எண்ணும் எழுத்தும் அருள்வாயே
நாவிலே வேதமும் தருவாயே
துங்கக் கரிமுகனே
தூமணியே
தம்பிக்குத் துணை நின்ற
தும்பிக்கை அழகா
ஐயா ஆதியின் மகனே
யானை முகனே
எங்கள் மாருதி ஆலயம்
குடி கொண்ட கோமகனே
அமுதத்தமிழால் போற்றுகிறோம்
உன் திருவடி சரணமய்யா

## திருப்பள்ளியெழுச்சி

ராகம் – பூபாளம்

பொழுது புலர்ந்தது மாருதி ப்ரபோ நின்
பொன்னடிகள் போற்றினோம் மாருதி ப்ரபோ!
எழுமின் விழுமின் எனப்பறவைகளும்
எங்ஙனும் ஒலி எழுப்பும் மாருதி ப்ரபோ!
தொழுது நின்னடிகள் துதி செய்தோம்
தொண்டு செய்ய எங்களைத் தூண்டவாரும்
பழுதிலாத பரமன் பதம் அளிக்கும்
பவனசுதனே பள்ளி எழுந்தருளாயே!

பிலஹரி

ஆதவனும் கீழ்திசையில் வந்து விட்டார்
அந்தகாரம் நீங்கி அகண்ட ஒளிவந்தது
நாதன் உம்மை நாடினோம் நல்லகீதம் பாடினோம்
நாலுவேதம் நன்குணர்ந்த நாயகனே வாரும்!
வேதனைகள் நீக்கியே வெற்றி உண்டாக்கிடும்
வீரசுர மாருதியே இங்கு வாரும்
சோதனை ஏதும் செய்திடாதீர்!
சுருதிப் பொருளே பள்ளி எழுந்தருளாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகனம்

மோகனகீதம் முழங்கிடக் கேளீர்!
மெய்யடியார் உம்மைத் தொழுவதைப் பாரீர்!
வாகை சூடிய ராமர் நாமத்தைச் சொன்னால்
வந்தருள் புரிவான் வாயு குமாரன் என்றே
பாகவதோத்தமர் பாடி மகிழ்ந்தார்
பவனசுதனே பள்ளி எழுந்தருளாயே!

தன்யாசி

பஞ்சமும் பட்டினியும் பாரினில் நீங்க
பாபங்கள் தொலைந்து பண்புடன் வாழ
வஞ்சகன் இராவணனின் இலங்கையை அழித்த
வாயுகுமாரா! உம்மை வந்தனை செய்தோம்!
ஆஞ்சனை சுதனே! ஆஞ்சநேயனே! உமது
அடி பணிந்தோம் பள்ளி எழுந்தருளாயே!

## ராம ஜெயம்

ராம ஜெயம் ஸ்ரீ ராம ஜெயம்
ராம ஜெயம் ஸ்ரீ ராம ஜெயம்
[ராம ஜெயம்]

தசரத ராமனுக்கு ராம ஜெயம்
அஞ்சனை செல்வனுக்கு ராம ஜெயம்
சீதா ராமனுக்கு ராம ஜெயம்
சிரஞ்சீவி ஹனுமனுக்கு ராம ஜெயம்
[ராம ஜெயம்]

வில்லேந்தும் ராமனுக்கு ராம ஜெயம்
வீராதி வீரனுக்கு ராம ஜெயம்
கல்யாண ராமனுக்கு ராம ஜெயம்
கலைஞான தீபனுக்கு ராம ஜெயம்
[ராம ஜெயம்]

ராஜா ராமனுக்கு ராம ஜெயம்
ரகுபதி தூதனுக்கு ராம ஜெயம்
வனவாச ராமனுக்கு ராம ஜெயம்
வளம் சேர்க்கும் மாருதிக்கு ராம ஜெயம் [ராம ஜெயம்]
அரசாண்ட ராமனுக்கு ராம ஜெயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனையாளும் மாருதிக்கு ராம ஜெயம்
ஸ்ரீதேவி நாதனுக்கு ராம ஜெயம்
ஸ்ரீ ஆஞ்சநேயனுக்கு ராம ஜெயம்

[ராம ஜெயம்]

## ஜெய ஜெய ஹனுமான்

ஜெய ஜெய ஹனுமான் - ஸ்ரீ
ஜெய ஜெய ஹனுமான்
ஜெயமளித்திடுவான் - வீர
ஜெய ஜெய ஹனுமான்
ஸ்ரீ ஜெய ஹனுமான் - ராம
ஸ்ரீ ஜெய ஹனுமான்
ஜெனகனின் மகளை - காத்த
ஸ்ரீ ஜெய ஹனுமான்

(ஜெய ஜெய)

அலை அலை என புரண்டிடும் அவன் அழகிய கேசம் - பிறை
நெற்றியில் மணம் வீசிடும் தினம் குங்கும ராமம்
கோமகன் என கூறிடும் தங்க மணி முடிக்கிரீடம் - அந்த
கோசலை மகன் நாமமே அவன் தோத்திரமாகும்.

காதினில் இரு குண்டலங்களும் கதிரொளி வீசும் அவன்
காலடிகளைத் தாங்கிய நிலம் ஒளிமயமாகும்
மார்பெனும் திருக்கோவிலில் ரகு ராமனின் ரூபன் - கொண்ட
மாருதி புகழ் பாடிடும் உன்னை வெற்றிகள் சேரும்.

(ஜெய ஜெய)

வானரன் என சாடிய அந்த ராவண ராஜன் - அவன்
கோட்டையை வென்று மீண்டவன் எங்கள் வானர ராஜன்
கம்பனும் அந்த வால்மிகி புகழ் பாடிய வீரன் - அந்த
மாமலை தனை தோளினில் கொண்ட சஞ்சீவி ராஜன்

(ஜெய ஜெய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## யாழ். இணுவில் மருதனார்பதி

# ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய சுவாமி தோத்திரம்

அகர நாயகன் ஆதிவி நாயகன்
வகர சுந்தரி மைந்தன் தமிழ்மறை
சிகர மேற்றிய சிற்பரன் நர்த்தன
விகடன் தாளிணை விரைமலர் போற்றுவாம்

## நூல்

1. பொருளதிக மறையெலாம் வியாகரண நெறியெலாம்
   பொங்கு மனு நீதி யெல்லாம்
   தெருளதிக தத்துவத் தெளிவெலாம் கலையெலாம்
   சிவானந்த சித்திகளெலாம்
   கருணைபெறு நிலையெலாம் பகுதியிடம் கற்றவா
   கடைக்கண் பார்த் தெம்மைக் காப்பாய்
   அருளிணுவில் மருதர்பதி ரகுராம சுந்தர
   ஆஞ்சநேய சுவாமியே.

2. மாதவம் புரியன்பன் ஒருவனிங் கொருகுடிசை
   வாழ்ந்தபஜீ சக்கரத்தின்
   சோதிகண் டனுதினமும் தோர்த்தரித் திராமனின்
   துணையடி தியானம் புரியும்
   போதெலாம் வந்துமகிழ் அடியானின் கோலத்தில்
   புனிதபணி யாற்றி நின்ற
   ஆதியே மருதர்பதி ரகுராம சுந்தர
   ஆஞ்சநே யசுவாமியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. முன்னையொரு முனிசாபத் தால்வந்த அஞ்சனையும்

முதுதவக் கேசரியும் சீர்

மன்னிமய மலைவந்து தவம் செய்யச் சிவன்தந்த

வரங் கொண்டு வாயுபகவான்

உன்னிவந் தணைதலால் உதித்த பெருமைந்தனே

உள்ளத்திருந்து காப்பாய்

அன்னமிடும் மருதர்பதி ரகுராம சுந்தர

ஆஞ்சநேய சுவாமியே.

4. சீருடைய தசரதன் பத்தினியர் உண்டபின்

சேர்பாத்தி ரப்பாயசம்

ஆரமுத மாயுண்டுன் அன்னைகருக் கொண்டுதரும்

ஆதிருத் திர தேவனே

சூரியனைப் பழமென்று பற்றிய சிங்காரனே

துயரிலா வாழ்வுதருவாய்

ஆரண நன் மருதர்பதி ரகுராம சுந்தர

ஆஞ்சநே யசுவாமியே.

5. தூயமதி மார்கழி யமாவாசை மூலத்தில்

தோன்றினாய், இராமவள்ளல்

நேயமிகு தூதனாய் சீதைதரு வெற்றிலை

நிறைமாலை சென்னிசூடி

ஆயுள்சிரஞ் சீவியாய் அருள்புரியும் ஐயா, நின்

ஆயபுருவு பெறுதருவாய்

ஆயகலை மருதர்பதி ரகுராம சுந்தர

ஆஞ்சநே யசுவாமியே.

6. கொடியவன் இராவணன் முதலாய அரக்கரின்

குலமதை யறுப்பதற்கு

நெடுமாயன் இராமனாய், வானவர் வானினம்,

மன்சுரேந் திரன் வாலி, தீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுநீலன், பானுசுக் கிரீவனாய் வர - வாயு
அம்சமாய் நீ யுதித்தாய்
அடியர் தொழு மருதர்பதி ரகுராம சுந்தர
ஆஞ்சநேய சுவாமியே.

7. பவளநிற மேனியும் பைம்பொ னொளிர் வதனமும்
பரஞானக் கருணைவிழியும்
திவளழகு குண்டலமும் திருமார்பிற் பூணூலும்
திரள் தோளும் மேனியெங்கும்
நவமணி யுரோமமும் தண்டாயு தமும் கொண்ட
நாதா எம் கவலை தீர்ப்பாய்
அவனிபுகழ் மருதர்பதி ரகுராம சுந்தர
ஆஞ்சநேய சுவாமியே.

8. நாவார ராமஜெயம் ராமஜெயம் என்பார் முன்
நண்ணிஎண் ணியனதருவாய்
பூவாரும் தூபமிட்டனுதினம் இராமனைப்
பூசிப்பார் புந்தியுறைவாய்
பாவாகும் இன்னிசைப் பண்டிதர் நின்புகழ்
பாடும் பணி யெனக்கருளுவாய்
ஆவாழும் மருதர்பதி ரகுராம சுந்தர
ஆஞ்சநேய சுவாமியே.

9. பொன் பெருகு வளமுண்டு நிலமுண்டு மனையுண்டு
புகழுண்டு பண்பு பேணும்
இன்பமனை யாளுண்டு மகவுண்டு பிரியாத
இனமுண்டு கலைஞான முண் (டு)
ஒன்பதுநற் கோளரின் சுகமுண்டு நின்பாதம்
உள்ளத்தில் வைத்தவர்க்கே
அன்பிணுவில் மருதர்பதி ரகுராம சுந்தர
ஆஞ்சநேய சுவாமியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஊனுந்து பிணிவறுமை வஞ்சனைப் பேய்க் கொடுமை
ஊழ்வினைப் பிறவித்துயரம்
நானுந்து மலவிருள் பழியெலாம் தீர்த்திடும்
நாதனே ஐய அநுமனே
தேனுந்து நின்னடிகள் சிந்தித்துச் சந்தித்த
சிவயோக சித்திதருவாய்
ஆனந்த மருதர் பதி ரகுராம சுந்தர
ஆஞ்சநே யசுவாமியே.

11. மைவரும் வண்ணத்தன் மகிழும்மா ருதியே மெய்ம்
மதிபுத்த ஞான குருவே
கைவரும் நிலையின்றித் தமியோங்கள் அலைகின்ற
கவலைகள் தீர்க்கொணாதோ
தைவரும் விக்கிரம உத்தரட்டாதியில்
சர்வகுட முழுக்குகந்த
ஜவதன, மருதர்பதி ரகுராம சுந்தர
ஆஞ்சநே யசுவாமியே.

சுபம்

ஆக்கியோன்
அருட்கவி. சீ. விநாசித்தம்பி

## அஞ்சனை மகனே

அஞ்சனை மகனே ஆஞ்சநேயா
அருட்கடல் நாதா ஆஞ்சநேயா
சிந்தையில் நிறைந்தாய் ஆஞ்சநேயா
சீர்தருவாயே ஆஞ்சநேயா.

சித்தரை நிலவே ஆஞ்சநேயா
முத்திரை பொன்னே ஆஞ்சநேயா
வீரத்தின் பொருளே ஆஞ்சநேயா
வெற்றியின் இலக்கே ஆஞ்சநேயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர வடிவே ஆஞ்சநேயா
சோதியன் கனியே ஆஞ்சநேயா
சந்தன மணமே ஆஞ்சநேயா
சந்ததம் தொழுதேன் ஆஞ்சநேயா

மூச்சினில் நிறைந்தாய் ஆஞ்சநேயா
பேச்சினில் நிறைந்தாய் ஆஞ்சநேயா
காற்றினில் கலந்தாய் ஆஞ்சநேயா
பாட்டினில் மகிழ்ந்தாய் ஆஞ்சநேயா

லட்சுமன் உயிரே ஆஞ்சநேயா
லட்சியம் ஜெயிப்பாய் ஆஞ்சநேயா
தொண்டுக்கு துணிவாய் ஆஞ்சநேயா
நட்பிற்கு இனியாய் ஆஞ்சநேயா

நெஞ்சினில் நிதமும் ஆஞ்சநேயா
ராமனை சுமக்கும் ஆஞ்சநேயா
வஞ்சனை அறியாய் ஆஞ்சநேயா
நெஞ்சினில் அமர்வாய் ஆஞ்சநேயா

கம்பனும் போற்றும் ஆஞ்சநேயா
வால்மிகி பாடும் ஆஞ்சநேயா
சேதுவின் கரைமேல் ஆஞ்சநேயா
தவமது புரியும் ஆஞ்சநேயா

ஐமுக வடிவே ஆஞ்சநேயா
ஆழ்கடல் தாண்டும் ஆஞ்சநேயா
வேதங்கள் அறிவாய் ஆஞ்சநேயா
ராகங்கள் தருவாய் ஆஞ்சநேயா

கற்பெனும் சுடரே ஆஞ்சநேயா
கர்ப்பூர உருவே ஆஞ்சநேயா
அற்புத உருவே ஆஞ்சநேயா
பொற்பதம் தொழுதேன் ஆஞ்சநேயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிலை தொடுத்தால் ஆஞ்சநேயா
வெற்றிகள் அருளும் ஆஞ்சநேயா
பக்தரின் கண்ணீர் ஆஞ்சநேயா
என்று நீ துடைப்பாய் ஆஞ்சநேயா.

# இணுவில்பதி ஆஞ்சநேயர் துதி

## துதி

ஆஞ்சநேயா அப்பா ஆஞ்சநேயா
அஞ்சனையின் புத்திரனே ஆஞ்சநேயா
அன்பர் உள்ளம் கோயில் கொண்டாய் ஆஞ்சநேயா
ஆலயமாய் நீ, அமைந்தாய் ஆஞ்சநேயா.

[ஆஞ்சநேயா]

இணுவில்பதி நீயுறைந்தாய் ஆஞ்சநேயா
இரட்சிப்பாயே எம்மை நீயும் ஆஞ்சநேயா
பக்தருக்கு பக்தர் ஆனாய் ஆஞ்சநேயா
பரம பக்தன் ஆனாயே ஆஞ்சநேயா.

[ஆஞ்சநேயா]

சீதைதனைத்தேடிச் சென்றாய் ஆஞ்சநேயா
சிறைமீட்க தீயுமிட்டாய் ஆஞ்சநேயா
சுந்தரேசநாதனாய் ஆஞ்சநேயா
சுக்கிரனின் பார்வை கொண்டாய் ஆஞ்சநேயா

[ஆஞ்சநேயா]

ஈடு இணை அற்றவனே ஆஞ்சநேயா
ஈடில்லா ஜோதியானாய் ஆஞ்சநேயா
பாலகர்க்கு பாலகன்நீ ஆஞ்சநேயா
பாசமுள்ள நேசன் ஆனாய் ஆஞ்சநேயா

[ஆஞ்சநேயா]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஞ்சநேயப் பெருமானின் அன்புகொண்ட அனுமாரே

## துதி

1. அன்புகொண்ட அனுமாரே
ஆதி, தூதன் ஆனாயே
அன்பருக்கு அருள் புரிய
ஆலயமாய் அமைந்தாயே

[அன்பு]

2. இராவணன் பகைதீர்க்க
இராமதூதன் ஆனாயே
இன்னல்களை களைந்தருள
இணுவில்பதி உறைந்தாயே.

[அன்பு]

3. வானவர் சேனையுடன்
வலம் வந்து நின்றாயே
வாலியைத் தானழித்து
வல்லமையைப் பெற்றாயே.

[அன்பு]

4. சீதை தனை தேடிச் செல்ல
சிறுகுரங்காய் சென்றாயே
சிந்தைபல தருபவனே
சீர்நிலையைத் தருவாயே.

[அன்பு]

5. இலங்காபுரி தான் நோக்கி
இன்னல் பலபுரிந்தாயே
இரக்கமற்ற அரக்கர்களை
இல்லாது அழித்தாயே.

[அன்பு]

6. சஞ்சலங்கள் தீர்ப்பவனே
சர்வபலம் கொண்டவனே
சரணடைந்தோம் உன்பாதம்
சாந்தநிலை தந்தருள் வாய்
எங்கும் சாந்தி நிலை தந்தருள்வாய்
எங்கும் சாந்தி நிலை தந்தருள்வாய். [அன்பு]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமரிடம் பக்தி கொண்ட ஆஞ்சநேயர்
## துதி

இராமரிடம் பக்திகொண்டாய் ஆஞ்சநேயா
இரட்சிப்பாயே எம்மை நீயும் ஆஞ்சநேயா
சீதையிடம் அன்பு கொண்டாய் ஆஞ்சநேயா
சீர்நிலையை தந்தருள்வாய் ஆஞ்சநேயா
சின்னக் குழந்தைகள் நாம் ஆஞ்சநேயா
சிந்தையிலே தான்வருவாய் ஆஞ்சநேயா

[இராமரிடம்]

செய்வதறியோமே ஆஞ்சநேயா
செந்தமிழைக் காத்தருள்வாய் ஆஞ்சநேயா
சூதுவாது அற்றவனே ஆஞ்சநேயா
சூத்திரங்கள் நீயறிவாய் ஆஞ்சநேயா
வல்லவர்க்கு வல்லவன் நீ ஆஞ்சநேயா
வையமெலாம் காத்தருள்வாய் ஆஞ்சநேயா

[இராமரிடம்]

நெஞ்சு துடிக்கிறதே ஆஞ்சநேயா
நெஞ்சமெல்லாம் நீ நிறைந்தாய் ஆஞ்சநேயா
விடிவுக்கோர் எல்லை உண்டே ஆஞ்சநேயா
உன்தன் விந்தைதனைக் காட்டிடையா ஆஞ்சநேயா
சரணம் சரணம் ஐயா ஆஞ்சநேயா
உன்பாதம் சரணடைந்தோம் ஆஞ்சநேயா

[இராமரிடம்]

ஆக்கம்
அருள்மிகு துர்க்கை அம்பிகையின் அடியேன்
கு. கமலேஸ்வரன்
துர்க்காபுரம்,
தெல்லிப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வில்லொடித்த ராமன்

ராம ராம ராம ராம ராம ராம - ஸ்ரீ
ராம ராம ராம ராம ராம ராம
வில்லொடித்த ராமனெங்கள் ராமனே - அந்த
ராமனுக்கு தூதன் ஆஞ்சநேயனே
சீதை உள்ளம் வென்ற எங்கள் ராமனே - அந்த
சீதை தன்னை மீட்ட ஆஞ்சநேயனே.

(வில்)

காடு சென்ற ராமன் எங்கள் ராமன் - அந்த
காடும் மேடும் தாண்டும் ஆஞ்சநேயனே
தீக்குளிக்கச் சொன்ன எங்கள் ராமனே - அந்த
தீயைக் கூட ஆளும் ஆஞ்சநேயனே.

(வில்)

நீல வண்ண ராமன் எங்கள் ராமனே - அந்த
நீலக்கடலை ஆளும் ஆஞ்சநேயனே
ஆளவந்த ராமன் எங்கள் ராமனே - என்னை
ஆளுகின்ற தெய்வம் ஆஞ்ச நேயனே.

(வில்)

மூவருக்கும் அண்ணன் எங்கள் ராமனே - பஞ்ச
பாண்டவர்க்கும் தோழன் ஆஞ்சநேயனே
வில்லெடுத்து போர் ஜெயித்த ராமனே - தீயின்
வாலெடுத்து வென்ற ஆஞ்சநேயனே.

(வில்)

## ஸ்ரீ ஆஞ்சநேய வழிபாடு

**மலையளவு கடுகாகும் - கடலளவு கால்வாயாகும்.**

ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமிகளைத் தியானித்துத் தொழுதோமே யானால், சகல காரியங்களும் எளிதில் கைகூடும். கஷ்டங்க ளெல்லாம் விலகி சகல சௌபாக்கியங்களும் நம்மை வந்தடையும்.

ஸ்ரீ ஆஞ்சநேய மஹாப்புரபுவின் அனுக்கிரக சக்தி அசாத்திய மானது. ஆஞ்சநேய சுவாமிகளின் துணை நமக்குக் கிடைத்துவிட்டால் மலையைக் கூடக் கடுகாக்கித் தூக்கி விடலாம். கடலைக் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்வாயைப் போலத் தாண்டி விடலாம். உடலைக் கூட லேசாக்கிக் கொண்டு ஆகாயத்தில் பறக்கலாம்.

இதெல்லாம் படிப்பதற்கு நன்றாக இருக்கிறது. நடைமுறையில் சாத்தியமாகுமா என்கிறீர்களா? ஏன் சாத்தியமாகாது. நமக்கு வரும் பிரச்சினைகளெல்லாம் மலையைப் போன்று, கடலைப் போன்று பூதாகாரமாகத் தானே வருகின்றன. மலை போன்று, கஷ்டங்களைக் கடுகாகவும், கடல் போன்ற சோதனைகளை கால்வாயாகவும் ஸ்ரீ ஆஞ்சநேய வழிபாடு மாற்றிவிடும்.

"அந்தோ! ஆஞ்சநேயரை வேண்டித் துதித்தாலும் கஷ்டங்கள் கடுகாயும், கால்வாயாகவும் தொடர்கின்றனவே. இதற்கு விமோசனமே கிடையாதா?" என்று கலங்குகிறீர்களா? என்ன செய்வது? கஷ்டங்கள் யாவும் காரணத்தோடு தான் இறைவனால் நமக்கு அளிக்கப்படு கின்றன. லீட்டர் லீட்டராகப் பாலைக் குடிப்பது கஷ்டம். ஆனால் அதே பாலைச் சுண்டக் காய்ச்சி கையளவு திரட்டுப் பாலாக்கி விழுங்குவது சுலபமல்லவா? அது போல்தான் மலை கடுகாவதும் கடல் கால்வாயாவதும்.

## ஆஞ்சநேய வழிபாட்டால் என்னென்ன கிடைக்கும்?

ஸ்ரீ ஆஞ்சநேயரைத் தொடர்ந்து வழிபட்டு வந்தால் நமக்குக் கிடைக்கும் பலன் இருக்கிறதே அது அளவிட முடியாதது. அறிவு விருத்தியாகும்; வலிமை ஓங்கும்; மன உறுதி ஏற்படும்; அச்சங்கள் அகலும், நோய் நொடிகள் விலகும்; தெளிவு பிறக்கும்; நாவண்மை சிறக்கும்.

**புத்திர் பலம் யசோ தைர்யம் நிர்பயத்வம் அரோகதா!**
**அஜாட்யம் வாக்படுத்வம் சஹநூமத் ஸ்மரணாத்பவேத்!!**

என்கின்ற இந்த ஸ்லோகம் மேற்சொன்ன அனைத்தையும் குறிக்கின்றது. புத்தி, பலம், புகழ், உறுதிப்பாடு, அஞ்சா நெஞ்சம், ஆரோக்கியம், விழிப்பு, வாக்கு வன்மை ஆகிய இவை அனைத்தும் ஒரே இடத்தில் அமைவது மிகவும் கடினம். ஆனால், ஆஞ்சநேயரை வழிபட்டால் இவை அனைத்தும் ஒருங்கே நமக்கு சித்திக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தக்க தருணத்தில் காத்தருள்வார்.

JN/C/43/CC 695

நமக்கு எது கிடைக்கிறதோ இல்லையோ! ஸ்ரீ ஆஞ்சநேய அனுக்கிரகத்தால் துன்பங்கள் மறைந்தொழியும்.

அசோக வனத்திலே சீதைக்கு ஏற்பட்ட துன்பங்கள் கொஞ்சமா? துன்பங்களால் துவண்டு நிலை தளர்ந்த சீதாப் பிராட்டியின் நெஞ்சத்திலே நம்பிகையை ஊன்றியவர் ஆஞ்சநேயர். மரக்கிளையில் அமர்ந்து கொண்டு 'ராம ராம' என்று சொன்னதும் சீதாதேவியின் கலங்கிய நெஞ்சில் தெளிவு ஏற்பட்டதல்லவா?

இராம – ராவண யுத்தத்திலே ஆஞ்சநேயரின் பங்கு சொல்லில் அடங்காதது. இடுககண் வந்த போதெல்லாம் இங்கிதமாக உதவியவர் ஆஞ்சநேயர். நாகபாசத்தால் லக்ஷ்மணன் வீழ்ந்தபோது, கணக்கற்ற வீரர்கள் சாய்ந்தபோது, சஞ்சீவி பர்வத்தையே தூக்கி வந்து அனைவருக்கும் புத்துயிர் அளித்தவரல்லவா ஹனுமான்.

இராமாயணத்திலே ஆஞ்சநேயரின் பல செயல்களைக் காண லாம். குறிப்பாக சுந்தர காண்டம் முழுவதும் ஸ்ரீ ஆஞ்சநேயரின் லீலா வினோதங்கள்தான். ஆஞ்சநேயர் ஒரு செயலுக்குச் சென்றால், அது நிச்சயம் வெற்றிதான்.

"கண்டேன் சீதையை" என்று ராமபிரானின் கலக்கத்தையே போக்கியவரல்லவா ஆஞ்சநேயர். நாமும் ஸ்ரீ ஆஞ்சநேயரை வழிபட்டு இன்னல்களிலிருந்து மீண்டு இன்ப வாழ்வை அடைவோமாக. அதற் கான வழிபாட்டு முறைகளை இங்கே காண்போமாக!

## பிரயாணம் செய்தல் அவசியமா?

அஞ்சனை மைந்தன் - வாயு புத்ரன் என்று ஸ்ரீ ஆஞ்சநேய ரைச் சொல்வார்கள். ருத்ரனின் அம்சமாகவும் இவரைச் சொல்லு வதுண்டு. மேலும் இவர் பெற்ற வரங்கள் எண்ணிலடங்கா.....? தன் பலத்தாலும் தான் பெற்ற வர பலத்தாலும், தன்னைத் துதிப்போர்க்கு சகல சேஷ்மங்களையும் தந்தருள்வார் ஹனுமார்.

"ஆஞ்சநேயா! என்னைக் காப்பாற்று!" என்று சொன்னால் போதாதா? இதிலுள்ள ஸ்தோத்திரங்களையெல்லாம் படித்துத்தான் ஆகவேண்டுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் ! முழுவதையுமே பாராயணம் செய்யாவிட்டாலும் தினம் தினம் கொஞ்சம் கொஞ்சமாகப் பாராயணம் செய்தே ஆக வேண்டும் என்பது கட்டளை போன்றது. ஐயய்யோ! இது என்ன இவ்வளவு கண்டிப்பு என்கிறீர்களா? அதற்கும் காரணம் சொல்கிறேன்.

சகல பலன்களையும்,வரங்களையும் பெற்றவர்தான் ஆஞ்சநேயர். இருந்தபோதிலும் அவர் பலம் அவருக்கே தெரியாது. வீரம் பொருந்திய ஆஞ்சநேயர் ஒரு சமயம் விளையாட்டாகக் கானகத்திலுள்ள மரங்களைச் சாய்த்துக் கிளைகளை ஒடித்து, கனிகளை வீசி ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தார். அப்போது அந்தக் காட்டிலே முனிவர்கள் தவம் செய்து கொண்டிருந்தனர். ஆஞ்சநேயரின் வீர விளையாட்டுக்கள் அவர்களின் தவத்திற்கு இடையூறாயின. உடனே ஏ ஹனுமா! இவ்வளவு பலம் இருக்கிறதென்று இப்படியெல்லாம் ஆடுகிறாயா? உன் பலம் உனக்கே தெரியாமல் போகக்கடவது! என்று முனிவர்கள் சாபம் கொடுத்து விட்டனர். அதனால் தான் இராமபிரான் சீதாதேவியைத் தேடுவதற்காக இவரை இலங்கைக்கு அனுப்பியபோது எப்படிக் கடலைக் கடப்பது என்று கலங்கி நின்றார்.

ஜாம்பவான் ஹனுமான் புகழைப் பாடிய உடனே தன் பலத்தைத் தானே உணர்ந்து அநாயாசமாகக் கடலைக் கடந்து சென்று வெற்றியுடன் திரும்பினார்.

இந்த நூலிலுள்ள ஸ்லோகங்கள் கவசம், மலர் வழிபாடு, இராமாயணம் மற்றும் பாடல்களும் ஸ்ரீ ஆஞ்சநேயரின் புகழைப் பாடுபவையே. உங்களுக்கு எது இஷ்டமோ அதைப் பாராயணம் செய்யுங்கள். ஸ்ரீ ஆஞ்சநேயர் அதிக பலத்துடன் உங்களுக்கு அனுக்கிரகிப்பார்.

## ஸ்ரீ ராகவேந்திரரின் ஹனுமத் பூஜை

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமான ஸ்ரீ ராகவேந்த்ர ஸ்வாமிகள் தான் பிருந்தாவனப் ப்ரவேசம் செய்வதற்கு முன்பு சில காலம் 'பஞ்சமுகி'யிலே ஆஞ்சநேயரைத் தியானித்தார். இன்றும் பஞ்சமுகிக்குகையில் சுயம்புவாய் பஞ்சமுக ஆஞ்சநேயரைக் காணலாம்.

ஸ்ரீ ராகவேந்திரரின் முந்தைய அவதாரமான ஸ்ரீ வியாஸராஜர் 92 இடங்களிலே ஸ்ரீ ஆஞ்சநேயரைப் பிரதிஷ்டை செய்தார்.

ஸ்ரீ ஆஞ்சநேய வழிபாடு நமக்கு சகல வளத்தையும் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிபடும் நாட்களும் முறைகளும்

ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமிகளை எல்லா நாட்களிலும் வழி படலாம். அதற்கு வசதிப்படாதவர்கள் புதன், வியாழன், சனி இம் மூன்று கிழமைகளில் வழிபடலாம்.

ஸ்ரீ ஆஞ்சநேயரின் திருவுருவப் படத்தையோ, அல்லது ராமர் பட்டாபிஷேகத்தையோ பூஜையில் வைத்து, அவருக்கு நைவேத்திய மாக அவரவர் வசதிக்கேற்ப பழங்களையும் வடை போன்ற இன்ன பிறவற்றையும் சமர்ப்பிக்கலாம்.

துளசி மாலையும் வெற்றிலைச் சுருள் மாலையும் ஆஞ்சநேய ருக்கு விசேஷமானவை. துளசிக்கு அநேக மருத்துவ குணங்கள் உண்டு. அதேபோல் அசோக வனத்திலே சீதாப்பிராட்டி வெற்றிலை யைக் கிள்ளி ஆஞ்சநேயரின் சிரசின்மேல் போட்டு அனுமா; நீ இவ்வுலகில் என்றென்றும் சிரஞ்சீவியாக வாழ்வாயாக என்று அருள் பாலித்தார். அதனால் ஆஞ்சநேயருக்கு வெற்றிலைச் சுருள் மாலையும் விசேஷமானது.

பூஜையை ஆரம்பிக்கும்போது "ராம ஜெயம்" அல்லது "ஸ்ரீ ராம ஜெயராம ஜய ஜய ராம" என்ற மந்திரத்தை 54 அல்லது 108 முறை தியானிக்க வேண்டும். அதன் பிறகு தமது பிரார்த் தனையைச் சொல்லி, இந்நூலிலுள்ள நாமாவளி மற்றும் மலர் வழிபாட்டினால் அர்ச்சனை செய்ய வேண்டும். கவசம் மற்றும் ஸ்தோத்திரங்களைப் பாராயணம் செய்ய வேண்டும்.

கீழ்க்கண்ட தினங்களில் பூஜையைத் தொடங்குவது மிகவும் சிறப்பானதாகும்.

**(1) மார்கழி மாதத்தில் மூல நட்சத்திரத்தோடு கூடிய அமாவாசை (இதுதான் ஆஞ்சநேயர் அவதரித்த திருநாள்)**
**(2) நட்சத்திரமும் அமாவாசையும் சேர்ந்து வராவிட்டால் அமாவாசையில்.**
**(3) சித்திரையில் ஸ்ரீ ராம நவமி தினத்தில்**
**(4) மாதம்தோறும் கேட்டை நட்சத்திரத்தில்**
**(5) இவை எதுவும் இல்லாவிட்டால் புதன், வியாழன், சனிக் கிழமைகளில் பூஜையைத் தொடங்கலாம்.**

## வெண்ணெய் சாத்துதல் - பொட்டு வைத்தல்

ஆஞ்சநேயச் சந்நிதிகளில் வெண்ணெய் சாத்தியிருப்பதைப் பார்க்கின்றோம். நமது வேண்டுதல்களுக்கு வெண்ணெயைப் போல உருகி நற்பலனைத் தருவார் ஆஞ்சநேயர். அவரது அருளால் நம் மனத்திலுள்ள துன்பங்களெல்லாம் வெண்ணைபோல் கரைந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ஆஞ்சநேயர் வாலிலே நவக்கிரகங்கள் இருப்பதாக ஐதீகம். அதனால்தான் ஆஞ்சநேயரின் வால் துவங்குமிடத்திலிருந்து வாலின் நுனிவரை 48 நாட்கள் சந்தனம் குங்குமப் பொட்டு வைத்து வந்தால் தடைப்படும் காரியங்கள் சீராகும். நினைத்தது கை கூடும் என்பர். வடைமாலை சாத்துதல் ஆஞ்சநேயருக்கு மிகவும் பிடித்தமானது.

## ஸ்ரீ ராம நாமமே உயிர் மூச்சு

ஸ்ரீ ஆஞ்சநேயர் விடும் மூச்சுக்காற்று கூட ராம ராம என்று தான் ஒலிக்கும். அப்படிப்பட்ட ராம தியானம் ஆஞ்சநேயருடையது. ஸ்ரீராம நாமம் எங்கு ஒலித்தாலும் அங்கே ஆஞ்சநேயர் ஆஜராகி விடுவார். ஸ்ரீ ஆஞ்சநேயரைப் பற்றிய அநேக ஸ்லோகங்கள் இயற்றிய துளஸீதாஸர் இராமாயண ப்ரவசனம் செய்யும் முன்பு பக்தர்களை ஒருமுறை வலம் வந்தாராம். ஏனெனில் பக்தர்களில் ஒருவராய் அமர்ந்து இராமகாதை கேட்பாராம் ஸ்ரீ ஆஞ்சநேயர். ஸ்ரீராம சுந்தரமூர்த்தியின் அனுமதியோடு அனுக்ரஹத்தோடு ஆஞ்சநேயர் நம்மோடே வாழ்ந்து வருகிறார்.

ஆம்! இராமாவதாரம் எடுத்ததற்கான காரியங்கள் முடிவுற்றதும் இராமபிரான் சீதாப்பிராட்டி சகிதமாய் வைகுந்தம் சென்றபோது அனுமானையும் அழைத்தார். ஆனால் ஆஞ்சநேயர் "ப்ரபோ! நான் இப்பூவுலகில் இருக்கவே விரும்புகிறேன். தங்களின் நாம சங்கீர்த்தனத்தைக் கேட்டுக் கொண்டும், பாடிக்கொண்டும், சொல்லிக் கொண்டும் இந்தப் பூமியிலே சில காலம் இருக்கத் தங்கள் அனுமதி வேண்டும்" என்றார். அதற்கு ராமபிரானும் "இந்த யுகம் முடியும் வரையில் பூவுலகில் இருந்து பின்னர் வைகுந்தம் வருவாயாக" என்கிறார். அதனால் இராமரைத் துதித்தாலும் ஹனுமனைத் துதித்தாலும் ஆஞ்சநேயர் அருள்புரிய வந்துவிடுவார்.

ஆஞ்சநேயருக்குப் பல ரூபங்கள் உண்டு. அதில் பஞ்சமுக ஆஞ்சநேயர் குறிப்பிடத்தக்கது. வீட்டிலும், ஆலயத்திலும் உள்ளன்போடு ஸ்ரீ ஆஞ்சநேயரைத் தொழுது சகல சௌபாக்கியங் களையும் பெறுவோமாக.

**சிவஸ்ரீ. இ. சுந்தரேஸ்வரக்குருக்கள்**
ஆதீன கர்த்தாவும் சிவாச்சாரியாரும்
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்
மருதனார்மடம், சுன்னாகம்,
இலங்கை


தயா அச்சகம், 138, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். T.P. No. 2881

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 JAN 2000
2124

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள் வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்



**தயா அச்சகம்**

ஓவ் செற்
றோணியோ

கொம்பியூட்டர் பிறின்ட்
சகல அச்சுவேலைகள்

சகல விதமான அச்சுவேலைகளையும் கொம்பியூட்டர் மூலம் ஓவ்செற் முறையிலும் றோணியோவிலும் தமிழ் ஆங்கில தட்டச்சுவேலைகளையும் குறைந்த செலவில் குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.

# தயா அச்சகம்

கொம்பியூட்டர் பிறின்ட் & றோணியோ
138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
போன் -2881

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org